விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 061 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 06 செவ்வாய்க்கிழமை (18.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

# பொருளாதார அடித்தளத்தை அமைக்கும் பட்ஜெட்

## பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அநுர



- அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 40 ஆயிரம் ரூபாயாக அதிகரிப்பு.
- யாழ்.நூலகத்துக்கு ரூ.100 மில்லியன் ஒதுக்கீடு.
- முதியோர் உதவித் தொகை 5 ஆயிரம் ரூபாயாக அதிகரிப்பு.
- சுகாதாரத்துறைக்கு ரூ.604 பில்லியன் ஒதுக்கீடு.
- கர்ப்பவதிகளுக்கு 7,500 மில்லியன் ஒதுக்கீடு.
- 30 ஆயிரம் பேரை அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செய்யத் திட்டம்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண அபிவிருத்திக்கு ரூ.5 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு 5 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் வடக்கு தெங்கு முக்கோண வலயத்தில் தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டதோடு வட மாகாணத்தின் கிராமியப் பாலங்கள் அபிவிருத்திக்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## யாழ்ப்பாணத்து மக்கள் நூலகத்தை புனிதமாகக் கருதுகின்றனர்

### ஜனாதிபதி அநுர புகழாரம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்து மக்கள் யாழ். பொதுநூலகத்தைப் புனிதமாகக் கருதுகின்றனர் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க புகழாரம் சூட்டியுள்ளார்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் 15

## சர்வதேச நாணய நிதியத்துக்கு அடிபணிந்து பட்ஜெட் முன்வைக்கப்பட்டுள்ளது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திற்கு அடிபணிந்தே வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து 15

## துண்டு விழும் தொகை 2,200 பில்லியன் ரூபாய்

(கொழும்பு)

2025ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் துண்டுவிழும் தொகை 2,200 பில்லியன் ரூபாய் ஆகும்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு அமைய 2025ஆம் ஆண்டில் அரச வருமானம் 4,990 பில்லியன் ரூபாயாக காணப்படுகின்றது.

2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு 15

## எம்.பிக்களுக்கு வாகனம் இல்லை

(கொழும்பு)

இவ்வருடத்தில் எந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாகனமோ அல்லது வாகன அனுமதிப் பத்திரமோ வழங்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 15

## உள்ளூராட்சித் தேர்தல் சட்டமூலம் ஏகமனதாக சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டமூலம், பாராளுமன்றத்தில் மேலதிக பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்துக்கு ஆதரவாக 187 வாக்குகள் அளிக்கப்பட்டு ஏகமனதாகத் திருத்தங்களின்றி நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் எவரும் வாக்களிக்கவில்லை.

இதன்மூலம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் புதிய வேட்புமனுக்களை கோருவதற்கு அனு 15

## கிணற்றுக்குள் தவறிவிழுந்த

### குழந்தையும் தாய் மாமனும் பலி

(யாழ்ப்பாணம்)


கிணற்றுக்குள் தவறி விழுந்த குழந்தையும் தாய் மாமனும் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சங்கரத்தைப் பகுதியில் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலலும்
## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 30 . 06 . 1958

மறைவு 22 . 01 . 2025

கடந்த 22.01.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சபாபதிப்பிள்ளை நித்தியானந்தன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 19.02.2025 புதன்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 21.02.2025 வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும், முகநூல், மின்னஞ்சல், பிரசுரம் மற்றும் மலர்வளையம், மலர்மாலை சாத்தியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் வழங்கிய அன்பு நெஞ்சங்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

(C-2289)

செட்டிவளவு,
இணுவில், மேற்கு,
இணுவில்.

077 290 2572

இங்ஙனம்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 - 12 - 1960

இறப்பு 17 - 02 - 2025

### திருமதி ஜெயராணி விவேகானந்தக் குருக்கள்

வல்வெட்டி வேவில் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ விவேகானந்தக்குருக்கள் ஜெயராணி அவர்கள் 17.02.2025 நேற்றுத் திங்கட்கிழமை கணேச பாதம் சரணடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதாரணியக்குருக்கள் - நீலாயதாக்ஷி அம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரையப்பா ஐயர் - மங்கையற்கரசி அம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் து.விவேகானந்தக்குருக்கள் (பிரதம குரு, யாழ்.கலட்டி வீரகத்தி பிள்ளையார் கோயில்) அவர்களின் அன்பு மனைவியும் பிரணவன், தாரணி, கௌசல்யா ஆகியோரின் பாசமிகு தாயாரும் கீர்தனன் (KST Tex) அன்பு மாமியாரும் பவித்திரன் (மாணவன் - யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), பைரவி ஆகியோரின் ஆசை அம்மம்மாவும் வை.இரஞ்சிதமலர், பாலச்சந்திரக் குருக்கள் (வேவில் பிள்ளையார்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் முத்துச்சாமி (லண்டன்), ராஜேஸ்வரி (கனடா), நாகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மூத்த சகோதரியும் வைத்தீஸ்வரன், மலர், கமலராஜி, பாலசுப்பிரமணியம், கிருபாகரன், அமரர் வைத்திலிங்கம் (ஓய்வுபெற்ற யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்), மகாதேவன் (ஓய்வுபெற்ற சுகாதார பரிசோதகர்), லலிதாம்பிகை, சிவபாலன், சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் அமரர் ஸ்ரீதயாளக்குருக்கள் அவரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (17.02.2025) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்.கலட்டி வீரகத்திப்
பிள்ளையார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(C- 2285)

தகவல்: கணவன் சிவஸ்ரீ.து.விவேகானந்தக் குருக்கள்
(பிரதமகுரு, கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோயில்)
077 129 1940

## அரச சேவையில் உள்ள 30 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

அரச சேவையில் உள்ள 30 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்று (17) பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரச துறையிலுள்ள அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்ப 30 ஆயிரம் பேரை ஆட்சேர்ப்புச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக, 2025 ஆம் ஆண்டில் 10 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## எந்தத் தரப்பினரையும் பட்ஜெட்டில் புறக்கணிக்கவில்லை - ஹந்துனெத்தி

மக்களுக்கு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவோம். அதற்கான திட்டங்களையும் வரவு செலவுத் திட்டத்தில் முன்வைத்துள்ளோம். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் எந்தத் தரப்பினரையும் வரவு செலவுத் திட்டத்தில் புறக்கணிக்கவில்லை என கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மக்களின் உரிமைகள் மற்றும் நாட்டின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தும் வகையில் தான் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் பிற நாடுகளினதும், வெளிநாட்டு நிறுவனங்கள் அல்லது ஒருசில நிறுவனங்களின் தேவைகளுக்காகவே வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. வரலாற்றில் முதன்முறையாக சிறைச்சாலைகள் மற்றும் சிறப்பு நிலையங்களில் உள்ள பிள்ளைகளின் நலன் கருதி பாரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## கோதுமை மாவின் விலை 10 ரூபாவினால் குறைப்பு

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையினை 10 ரூபாவினால் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிறீமா மற்றும் செரண்டிப் நிறுவனங்களிடையேயான இணக்கப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ள குறித்த விலைத்திருத்தமானது இன்று முதல் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

அதிகரித்து வரும் மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் வர்த்தக அமைச்சின் திட்டத்துக்கு அனுசரணை வழங்கும் விதமாக குறித்த விலைத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கோதுமை மா பயன்படுத்தப்படும் உணவுப் பொருட்களின் விலைகளும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோண்டாவில் தில்லையம்பதியைச் சேர்ந்த
பல்துறைக் கலைஞன், சிறந்த ஆளுமையாளன்

### திரு. செல்லர் குமாரசுவாமி

அவர்கள் 12.12.2024 அன்று
இலங்கையின் உயரிய விருதான
கலாபூஷணம் விருதைப்
பெற்றமையினையிட்டு
பெருமகிழ்வடைகிறோம்.
கலைத்துறையில் அவர்
இன்னும் பல விருதுகளைப்
பெற வாழ்த்தி
வணங்குகின்றோம்.

வாழ்த்துவோர்
கோண்டாவில் தில்லையம்பதி
வாழ் மக்களும்
புலம்பெயர் உறவுகளும்

(3451)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ஜெட்-2025



தேசிய மக்கள் சக்தியின் முதலாவது வரவு செலவுத் திட்டம் நிதி அமைச்சர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நேற்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவை பின்வருமாறு,

- இந்த வருடம் 5 வீத பொருளாதார வளர்ச்சியை அடைவதே எதிர்பார்ப்பு
- மூலதனச் செலவுக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து 4%
- தேசிய மேலாண்மை கட்டமைப்புக்காக 750 மில்லியன் ரூபாய்
- இலங்கையில் டிஜிற்றல் மயமாக்கலாக டிஜிற்றல் அடையாள அட்டையை விரைவில் அறிமுகப்படுத்த நடவடிக்கை
- இலங்கை பொருளாதார அதிகார சபை உருவாக்கப்படும்
- கட்டுநாயக்க விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தை ஜப்பானின் நிதியுதவியுடன் விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை
- புதிய கண்டுபிடிப்பு நிதியத்தை ஸ்தாபிக்க 1,000 மில்லியன் ரூபாய்
- அரசாங்கத்திற்கு சொந்தமான சகல சொகுசு வாகனங்களையும் எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஏலத்தில் விட நடவடிக்கை
- MP க்களுக்கு வாகனமோ அல்லது வாகன அனுமதிப் பத்திரமோ கிடையாது
- அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் பலன்களை மதிப்பீடு செய்ய குழு
- கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்கு சத்துணவு திட்டத்திற்காக 7,500 மில்லியன் ரூபாய்
- சுகாதாரத் துறைக்காக 604 பில்லியன் ரூபாய்
- தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளிகளின் அபிவிருத்திக்காக 80 மில்லியன் ரூபாய்
- பாடசாலைகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த 1,000 மில்லியன் ரூபாய்
- முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவு எதிர்வரும் ஜூலை முதல் 1,000 ரூபாவால் அதிகரிப்பு
- மஹபொல மாணவர் உதவித்தொகை 7,500 ரூபாவாக அதிகரிப்பு
- தரம் 5 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 1500 ரூபாய் நிதியுதவி
- யாழ்.நூலகத்திற்கு கணினிகள் உள்ளிட்ட உபகரணங்களை வழங்க 100 மில்லியன் ரூபாய், ஏனைய நூலகங்களின் அபிவிருத்திக்காக 200 மில்லியன் ரூபாய்
- திருகோணமலையில் 61 எண்ணெய் தாங்கிகளின் கூட்டு அபிவிருத்திக்கு நடவடிக்கை
- பெரும்போகத்தில் நெல் கொள்வனவிற்காக 5,000 மில்லியன் ரூபாய்
- நெல் விநியோக சபை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை
- நீர்ப்பாசனத்துறை அபிவிருத்திக்காக 78,000 மில்லியன் ரூபாய்
- வடக்கு தெங்கு முக்கோணம் உள்ளிட்ட புதிய தென்னந்தோப்பு அபிவிருத்திக்கு 500 மில்லியன் ரூபாய்

சமூக பாதுகாப்பு செலவு (இழப்பீடு) 232.5 பில்லியன் ரூபாய்

சிறுநீரக நோயாளிகளுக்கான உதவித்தொகை 10,000 ரூபாவாக அதிகரிப்பு

- முதியோர் உதவித் தொகையை ஏப்ரல் மாதத்திலிருந்து 5,000 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை
- சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் புனர்வாழ்வு மையங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சிறுவர்கள், ஆதரவற்ற சிறார்களுக்கு 5,000 ரூபாய் கொடுப்பனவு
- இயற்கை அனர்த்தம் மற்றும் வனவிலங்கு பாதிப்பால் இடம்பெறும் உயிரிழப்புகள், அங்கவீனமடைவோருக்கான இழப்பீட்டு தொகை 10 இலட்சம் ரூபாய் வரை அதிகரிப்பு
- சிரேஷ்ட பிரஜைகளுக்கு சிறப்பு வட்டி யோசனைத் திட்டம்
- பண்டிகைக் காலத்தில் லங்கா சதொச ஊடாக உணவுப்பொதி
- கொழும்பு நகரை ... தியான 100 பஸ்கள். 3,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
- புதிய பஸ் நிறுவனத்தை ஸ்தாபிக்க நடவடிக்கை
- ரயில் பெட்டிகளை மறுசீரமைக்க 500 மில்லியன் ரூபாய்
- தனியார் மற்றும் இ.போ.ச பஸ்கள் ஒன்றிணைந்த நேர அட்டவணையில் பயணிக்க யோசனை
- போதையற்ற சமூகத்தை கட்டியெழுப்ப 500 மில்லியன் ரூபாய்
- ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்திற்கு நாளாந்த நடவடிக்கைகளுக்காக திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கப்பட மாட்டாது
- கிராமங்களில் வீதி அபிவிருத்திக்காக 3000 மில்லியன் ரூபாய்
- வட மாகாணத்தில் கிராம வீதிகள் மற்றும் பாலங்களின் அபிவிருத்திக்காக 5,000 மில்லியன் ரூபாய்
- பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 4,267 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
- மலையக தமிழ் இளைஞர்களின் தொழிற்பயிற்சி வாழ்வாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக 2,450 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
- மலையக தமிழ் சமூகத்தின் பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறைகளுக்காக 866 மில்லியன் ரூபாய்
- கழிவகற்றல் முகாமைத்துவத்திற்காக 750 மில்லியன் ரூபாய்
- யானை - மனித மோதலை கட்டுப்படுத்த வரவு - செலவு திட்டம் 640 மில்லியனாக உயர்வு
- "இலங்கையர் நாள்" தேசிய வைபவத்தை நடத்த யோசனை. அதற்காக 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு
- அரச ஊழியர்களின் குறைந்தபட்ச ஊதியம் 15,750 ரூபாவாக உயர்த்தப்படும்,
- அரச சேவையின் குறைந்தபட்ச அடிப்படை சம்பளம் 24,250 ரூபாவிலிருந்து 40,000 ரூபாவாக 15,750 ரூபாவால் அதிகரிப்பு
- தனியார் துறையில் குறைந்தபட்ச மாத சம்பளம் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து 27,000 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்
- பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் தலையீடு செய்யும்
- அரச ஊழியர்களுக்கு 8,250 ரூபாய் அதிகரிப்பை குறைந்தபட்ச மாத சம்பள அடிப்படையில் மேற்கொள்ள ...

## யாழ்.பொது நூலகத்தின் வசதிகளை மேம்படுத்த

### ரூ.100 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)



யாழ்ப்பாண நூலகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பாதீடு வாசிப்பின் போதே இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் பிற பகுதிகளில் உள்ள நூலகங்களின் மேம்பாட்டுக்காக 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் என பாதீடு உரையில் ஜனாதிபதி தெரிவித்தார். (6-8)

## அரச துறையினரின் சம்பளம் அதிகரிப்பு

(கொழும்பு)

அரச துறையில் அடிப்படை சம்பளத்தை ரூ.15,750 அதிகரித்து ரூ.24,250 இலிருந்து ரூ.40,000 ஆக உயர்த்த முன்மொழியப்பட்டுள்ளது.

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட வாசிப்பின் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

குறைந்தபட்ட வருடாந்த சம்பள அதிகரிப்பு ரூ.250 இலிருந்து ரூ.450 ஆக உயர்த்தப்படும். இது 2025 முதல் 2027 வரை படிப்படியாக செயற்படுத்தபடும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த சம்பள அதிகரிப்புக்கான மொத்த தொகை ரூ.325 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. (6-8)

## வடக்கின் கிராமிய பாலங்களின் அபிவிருத்திக்கு


### ரூ.5000 மில்லியன் நிதி

(கொழும்பு)

வடமாகாணத்தின் கிராமிய பாலங்கள் அபிவிருத்திக்காக 5000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் இடம்பெற்ற வரவு-செலவுத்திட்ட வாசிப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். (6-8)

## வட்டுவாகல் புனரமைக்க ரூ.1000 மில்லியன் ஒதுக்கீடு



(கொழும்பு)

முல்லைத்தீவு வட்டுவாகல் பால நிர்மாணத்திற்காக 1,000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று பாராளுமன்றில் இடம்பெற்ற பாதீடு உரை வாசிப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

வட்டுவாகல் பாலம் பழுதடைந்த நிலையில் உள்ளமையினால் இதனை நிர்மாணிக்க ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார். (6-8)

## தேங்காய் உற்பத்தியை வடக்கில் அதிகரிக்க

### ரூ.500 மில்லியன் ஒதுக்கீடு


(கொழும்பு)

வடக்கு தெங்கு முக்கோண வலயத்தில் தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார் நேற்று பாராளுமன்றில் இடம்பெற்ற பாதீடு வாசிப்பு உரையின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.(6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## குதிரைப் பந்தய வீரர் மரணம்



அயர்லாந்தின் குதிரைப் பந்தய விளையாட்டு வீரரான மைக்கேல் ஓசுல்லிவன் தனது 24 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.


கடந்த பெப்ரவரி 6 ஆம் திகதி துர்ல்ஸில் குதிரை பந்தயத்தின் போது நடந்த விபத்தில் கொர்க் பல்கலைக்கழக மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் கோமா நிலையில் இருந்த நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் ஐரிஷ் குதிரை யேற்றம் ஒழுங்குமுறை வாரியத்தினை (IHRB) பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

IHRB இன் தலைமை மருத்துவ அதிகாரி டொக்டர் ஜெனிஃபர் புக் ஒரு அறிக்கையில், இந்த நம்பமுடியாத கடினமான நேரத்தில் மைக்கேலின் குடும்பத்தினர் உயிரிழந்த வீரரின் உறுப்புகளை தானம் செய்ய முடிவு செய்தனர். அவ்வாறு செய்வதன் மூலம் மற்ற நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மைக்கேலின் வெற்றி மற்றும் அவரது பணிவு பலரை ஊக்கப்படுத்தியிருக்கும். மேலும் அவரை அறிந்த அனைவருடனும் இன்று இழப்பின் உணர்வைப் பகிர்ந்து கொள்கிறேன் என்றும் ஜெனிஃபர் புக் தெரிவித்தார். (6-8)

## மும்பை அணியில் இணைந்த ஆப்கான் வீரர்




ஐ.பி.எல் போட்டியில் பங்கேற்கும் மும்பை இந்தியன்ஸ் அணியில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த முஜிப் உர் ரஹ்மான் இணைந்துள்ளார்.

ஐ.பி.எல் போட்டியில் 5 முறை பட்டம் வென்ற அணியாக மும்பை இந்தியன்ஸ் உள்ளது.

இறுதிப் போட்டிக்கு வந்த 5 முறையும் அந்த அணி கோப்பையை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல் தொடர் மார்ச் 22 இல் தொடங்கவுள்ளது. மும்பை இந்தியன்ஸ் அணியால் ரூ.4.8 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டிருந்த ஆப்கானிஸ்தான் வீரர் அல்லா கசன்ஃபர் காயம் காரணமாக தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

இதையடுத்து, அவருக்குப் பதிலாக ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த முஜிப் உர் ரஹ்மான் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முஜிப் உர் ரஹ்மானை ரூ.2 கோடிக்கு மும்பை இந்தியன்ஸ் அணி வாங்கியுள்ளது. இதுவரை 19 ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடியுள்ள முஜிப் உர் ரஹ்மான் 19 விக்கெட்களை சாய்த்துள்ளார். (6-8)

## ரசிகர்கள் என்னை 'கிங்' என அழைக்க வேண்டாம்

### பாபர் அசாம் தெரிவிப்பு



பாகிஸ்தான் அணி நிர்வாகம் வித்தியாசமாக ஃபகர் சமான், பாபர் அசாம் ஆகியோரை இந்த முத்தரப்பு தொடரில் ஓப்பனிங் வீரர்களாக இறக்கியிருக்கிறது. பாகிஸ்தான் அணி நிர்வாகத்தின் விமர்சனத்துக்குள்ளாகியும் வருகிறது.

இந்த நிலையில், ரசிகர்ளுக்கு பாபர் அசாம் வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார்.

இது குறித்து பத்திரிகையாளர்கள் சந்திப்பில் பேசிய பாபர் அசாம், தயவு செய்து என்னை கிங் என்று அழைப்பதை நிறுத்துங்கள். நான் கிங் இல்லை, அந்த இடத்துக்கு இன்னும் வரவுமில்லை. எனக்கு இப்போது புதிய பொறுப்புகள் இருக்கின்றன.

கடந்த காலங்களில் நான் என்ன செய்திருந்தாலும் ஒவ்வொரு ஆட்டமும் எனக்கு புதிய சவால்தான். தற்போதைய சூழல் மற்றும் எதிர்காலம் ஆகியவற்றில் நான் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறினார்.

பாபர் அசாமை விராட் கோலியுடன் ஒப்பிட்டு சமூக வலைத்தளங்களில் விவாதங்கள் அரங்கேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## வெளியானது ஐ.பி.எல் அட்டவணை

2025 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் போட்டி அட்டவணையை பி.சி.சி.ஐ வெளியிட்டுள்ளது. அதன்படி, மார்ச் 22 ஆம் திகதி தொடங்கும் ஐ.பி.எல் இன் 18 ஆவது சீசன் மே 25 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

இந்த சீசனின் முதல் போட்டியில் நடப்புச் சம்பியனான கொல்கத்தா அணி பெங்களூர் அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. அதேமாதிரி சென்னை அணியின் முதல் இரண்டு போட்டிகளுமே பரபரப்பான போட்டிகளாக அமையவிருக்கிறது. சென்னை அணி தனது முதல் லீக் போட்டியிலேயே மும்பை அணியை சேப்பாக்கத்தில் எதிர்கொள்கிறது.

அதேமாதிரி அடுத்தப் போட்டியில் பெங்களூர் அணியை மார்ச் 28 ஆம் திகதி சேப்பாக்கத்தில் எதிர்கொள்கிறது.


அதேமாதிரி மும்பை அணி தங்களின் முதல் ஹோம் மேட்ச்சை 31 ஆம் திகதி கொல்கத்தா அணியை வான்கடேவில் எதிர்கொள்கிறது.

பெங்களூர் அணி தங்களின் முதல் ஹோம் கேமை ஏப்ரல் 2 ஆம் திகதி தான் ஆடுகிறது. குஜராத்துக்கு எதிரான அந்த ஆட்டம் சின்னசாமி மைதானத்தில் நடக்கவிருக்கிறது.

ப்ளே ஆப்ஸ் சுற்று போட்டிகள் மே 20 ஆம் திகதி முதல் தொடங்குகிறது. மே 20 ஆம் திகதி குவாலிபையர் 1, மே 21 ஆம் திகதி எலிமினேட்டர், மே 23 ஆம் திகதி குவாலிபையர் 2, மே 25 ஆம் திகதி இறுதிப்போட்டி நடக்கவிருக்கிறது. குவாலிபையர் 1 மற்றும் எலிமினேட்டர் போட்டிகள் ஹைதராபாத்திலும் குவாலிபையர் 2 மற்றும் இறுதிப்போட்டி கொல்கத்தாவிலும் நடக்கவிருக்கிறது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதில் மேன்முறையீட்டு நீதியரசர் தாஹிரின் பதவிக்காலம் நீடிப்பு



(கொழும்பு)

பதில் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசராக நீதியரசர் மொஹமட் லபார் தாஹிரின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நீதியரசர் மொஹமட் லபார் தாஹிர் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் முன்னிலையில் நேற்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இதன்போது ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில்
ஆசிரியராகக் கடமையாற்றும்
திருமதி. மாரீன் பிரசன்னா பாலகுமார்
அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்
## பிலிப் சிலுவைராசா

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை
(3443)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். திருமதி.
## பொன்மலர்ச்செல்வி சிவபாதம்

நிஜம் இன்றி நிழலில்லை – என்பது
பொய்த்துவிடும் படியாய் – உம்
நிஜம் இங்கு இல்லை என்றபோதும்
எம் நெஞ்சத்தில் என்றும் மறையாத
நிழலாகி மாறாத நினைவாகி
எம்மோடு வாழும் உம் உருவம்.

N.சிவபாதம் (கணவன்)
சுதர்சன் யோகலட்சுமி (மகள்)
றொக்சனா, ஜெரோன் (பேரப்பிள்ளைகள்)

பலாலி வீதி,
கோண்டாவில். (839)


# மரண அறிவித்தல்

பிறப்பு
19 . 04 . 1950



இறப்பு
17 . 02 . 2025

## இக்னேசியஸ் லொயலா மேரிறோஸ்

குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இக்னேசியஸ் லொயலா (மகேந்திரன்) மேரிறோஸ் நேற்று (17.02.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேவியர்-ஜெயரூட் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மத்தியூஸ்-சலேற்றம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், இக்னேசியஸ் லொயலாவின் அன்பு மனைவியும், அன்சிலின் பெகின் (அபிவிருத்தி உத்தியோகத்தர், ஒட்டுசுட்டான்-DS Office) அவர்களின் பாசமிகு தாயும், நிலானியின் (ஆசிரியர், முருங்கன் மத்திய கல்லூரி) அன்பு மாமியாரும், யோண்-கார்மேல், வின்சன்டிபோல்-ஜெசி, சிங்கராயர்-பிலோமினா, டக்ளஸ்-பெத்தோல்டா, பிறிஜிட், பொமிக்கோ(குமார்)-றுபினா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான மரியதாஸ்-மேரியூலியற், யூலியன் ஜெயசீலன்-வைலற், றிச்சட் மற்றும் பேர்மினஸ்-அஞ்சலாமேசி, செல்வரட்ணம்-மேரி மேபிள், ஆன் றிச்சட், இராசநாயகம்-பெனடிக்ரா, எட்மன்-திலகா, ஞானம்-நிலானி, பிறின்டன்ஸ்-நிர்மலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி அவரது இல்லத்தில் நடைபெற்று 18.02.2025 இன்று (செவ்வாய்க்கிழமை) மாலை 3 மணியளவில் இரங்கல் திருப்பலி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல: 02, சென்.ஜேம்ஸ் வீதி,
குருநகர். (3450)

தகவல்: குடும்பத்தினர்
மகன் அன்சிலின் பெகின் (பாபுஜி)

# இராசிபலன்

18.02.2025
மாசி 06, செவ்வாய்க்கிழமை
சஷ்டி பின்னிரவு 5.58 மணிவரை

சித்திரை காலை 6.42 மணிவரை
சுபநேரம் 11.02-12.32 மணிவரை
இராகுகாலம் 3.32-5.02 மணிவரை

சந்திராஷ்டமம் - ரேவதி

வளவன்

**மேஷம்** நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், உடல் நலனில் அக்கறை கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், புதிய பொறுப்புக்களை யோசித்துச் செய்வது நல்லது, உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மகரம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளால் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிம்மம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு, கௌரவம் அந்தஸ்து உயரும் நாள்.

**விருச்சிகம்** பிரபலமானவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், ரோக பயமுண்டு.

**கும்பம்** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கன்னி** வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.

**தனுசு** இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் சிறுசிறு முரண்பாடுகள் தோன்றி மறையும்.

நல்ல நண்பன் நூறு உறவினர்களுக்கு சமானம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரயில் சேவைகளின் தரத்தை மேம்படுத்த

## அரசு நடவடிக்கை



(கொழும்பு)

ரயில் தாமதங்களைத் தடுப்பதற்காக, நாளாந்தம் சேர்க்கப்படும் ரயில் இயந்திரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

எல்ல பகுதிக்கு விஜயம் செய்த பின்னர் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன, ரயில் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக குறிப்பிட்டார்.


மின்சார ரயில்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் இலங்கையில் ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்படும் செயற்பாட்டுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

தினமும் சுமார் 217 முதல் 220 ரயில் சேவைகள் உள்ளன. கடந்த முறை அவற்றில் சுமார் 18 அல்லது 20 சேவைகள் இரத்து செய்யப்பட்டன. சராசரியாக, இலங்கைக்கு நாளாந்த செயற்பாடுகளுக்காக சுமார் 60 முதல் 70 ரயில் இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

ஆனால் கடந்த காலத்தில், சுமார் 45 அல்லது 50 இயந்திரங்களே செயற்பாட்டில் இருந்தன. இதை அதிகரிக்க நாங்கள் முயற்சி செய்கிறோம்.

மேலும் இம்மாத இறுதிக்குள், நாளாந்த செயற்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் எண்ணிக்கையை 60 இற்கும் அதிகமாக பயன்படுத்த நினைக்கிறோம் என தெரிவித்தார். (6-8)

# இலங்கையை வந்தடைந்தது இந்தோனேசியப் போர்க்கப்பல்



(கொழும்பு)

இந்தோனேசியா கடற்படைக்குச் சொந்தமான 'KRI BUNG TOMO - 357' (கிரி பங் டோமோ - 357) என்ற போர்க்கப்பல் இலங்கையை வந்தடைந்துள்ளது.


இந்த போர்க்கப்பல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு துறைமுகத்திற்கு சிநேகபூர்வ விஜயத்திற்காக வந்தடைந்தது. குறித்த கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு ஏற்ப வரவேற்றுள்ளனர்.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ள 'KRI BUNG TOMO - 357' போர்க் கப்பல் 95 மீற்றர் நீளம் கொண்டது.

இந்த கப்பல், மொத்தம் 111 உறுப்பினர்களை உள்ளடக்கியதுடன், கப்பலின் கட்டளை அதிகாரியாக் கப்டன் (N) DEDI GUNAWAN WIDYA TMOKO கடமையாற்றுகின்றார் என கூறப்பட்டுள்ளது.

இந்த போர்க்கப்பல் நாட்டில் தங்கியிருக்கும் காலப் பகுதியில், கொழும்பில் உள்ள கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலங்களை பார்வையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# மியான்மார் சைபர் முகாம்களில் மேலும் நான்கு இலங்கையர்கள்



(மியான்மார்)

மியான்மாரில் உள்ள சைபர் முகாம்களில் மேலும் நான்கு இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களை மீட்பதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாக மியான்மாரில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், அவர்களில் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார். மியன்மாரில் சைபர் குற்றவாளிகளின் பிடியிலிருந்து 30 இலங்கையர்கள் மீட்கப்பட்டு நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (6-8)

# சிறுதானியப் பயிர்ச்செய்கை தொடர்பில் விளக்கமளிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள சிறுதானியப் பயிர்ச்செய்கை தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று வட மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது சிறுதானியத்தை பயிரிடுவதற்கு ஊக்குவித்தல், கால்நடைகளை கட்டுப்படுத்தல், சட்டவிரோத கிருமிநாசினி பயன்படுத்துவதை தடுத்தல், உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இவ் ஊடக சந்திப்பில் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சு. செந்தில்குமரன், மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி எஸ். அஞ்சனாதேவி, வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி எஸ்.வசீகரன், வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் எந்திரி த. ராஜகோபு, வடக்கு மாகாண



கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் ந.திருலிங்கநாதன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (6-8)

# டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் 310 பேருக்கு நிரந்தர நியமனம்

## சுகாதார பிரதி அமைச்சர்



(கொழும்பு)

டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் 310 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என சுகாதார மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதி அமைச்சர் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். நாடு முழுவதும் தற்போது 310 டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்கள் தமது தொழிலை உறுதிப்படுத்துமாறு கோரி மிக நீண்டகாலமாக கோரிக்கை விடுத்துவந்துள்ளதுடன் அடிக்கடி சத்தியாகிரகத்திலும் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதற்கு நிதி அமைச்சினால் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இன்னும் இரண்டரை மாதத்துக்குள் இந்த நியமனம் வழங்கப்படும் எனவும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (6-8)

# 362 மில்லியன் டொலர் வருமானம்


(கொழும்பு)

சுற்றுலாத்துறை மூலம் இலங்கையின் அந்நியச் செலாவணி வருவாய் கடந்த ஜனவரி மாதத்தில் 362 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 34.5 சதவீதம் அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் சுற்றுலாத் துறை வருமானம் 269 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்தது. அத்துடன் இந்த ஆண்டின் முதல் 44 நாட்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (6-8)

# பேருந்து - வான் மோதி விபத்து; 12 பேர் காயம்



(கொழும்பு)

கந்தகெட்டிய போபிட்டிய வீதியின் வெவெதென்ன பகுதியில் நேற்று காலை தனியார் பேருந்து ஒன்று, ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் பணியாளர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் வானில் பயணித்த 8 பெண்கள் உட்பட 12 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 7 பேர் மேலதிக சிகிச்சைக்காக மஹியங்கனை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறுகிய வீதியின் வளைவுப் பகுதியில் இரண்டு வாகனங்களும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் கந்தகெட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டை முன்னிட்டு விசேட உலர் உணவுப்பொதி

## பாதீட்டில் ரூ.1000 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை மானிய விலையில் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான மானிய நடவடிக்கையாக, பண்டிகைக் காலத்திற்கான உணவுப் பொதி ஒன்றை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்கள் குறைந்த விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகளை முன்வைத்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவிக்கையில், புத்தாண்டு காலத்தில் லங்கா சதொச நிறுவனத்தின் மூலம் அரிசி, ரின் மீன், பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் கருவாடு உள்ளிட்ட உலர் உணவுப் பொதியை வழங்க முன் மொழியப்பட்டுள்ளது.

இப் பொதியை வழங்குவதற்கான செலவுக்காக வரவு-செலவுத் திட்டத்திலிருந்து 1,000 மில்லியன் ரூபாயை ஒதுக்க முன் மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# பல்கலை மாணவர்களின் மஹபொல கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹபொல கொடுப்பனவு 5000 ரூபாவிலிருந்து 7500 ரூபாய் வரை அதிகரிக்கப்படுகிறது.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை நேற்று பாராளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் 4000 ரூபாயிலிருந்து 6500 ரூபாய் வரை அதிகரிக்கப்படுவதுடன், இவை அனைத்தும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் அமுலாக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார். (6-8)

# 100 புதிய பேருந்துகள் இறக்குமதி செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

"மெட்ரோ" என்ற புதிய நிறுவனத்தின் கீழ் பயணிகள் போக்குவரத்திற்காக 100 புதிய பேருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டு பயன்படுத்தப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே ஜனாதிபதி அதனை தெரிவித்தார். (6-8)


## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

**வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல்.**

எமது சங்கத்தின் கடந்த 31.12.2024 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதியுடையவர்களின் வாக்காளர் பட்டியல் இயங்கி வருகின்ற கிளைகளில் கடந்த 07.02.2025 தொடக்கம் 28.02.2025 வரை காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. இயங்காத கிளைகளுக்கான வாக்காளர் பட்டியல் பின்வரும் கிளைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

| பூட்டிய கிளை. | பார்வைக்கு வைக்கும் கிளை. |
|---|---|
| 02 - அச்செழு வடக்கு. | 01 - அச்செழு. |
| 06 - நீர்வேலி சந்தி. | 04- நீர்வேலி விக்கினேஸ்வரா. |
| 07 - நீர்வேலி இராசவீதி. | 08- நீர்வேலி கரந்தன். |
| 10 - நீர்வேலி பூதர்மடம். | 09- நீர்வேலி கந்தசாமிகோயிலடி |
| 11 -நீர்வேலி ஜங்கரன். | 08- நீர்வேலி கரந்தன் |
| 13 -கோப்பாய் விநாயகர். | 12 - கோப்பாய் சந்தி. |
| 16 - கோப்பாய் தெற்கு. | 14 - கோப்பாய் கண்ணகை. |
| 20- கோப்பாய் தெற்கு கட்டப்பிராய். | 21 - கோப்பாய் ஞானபாஸ்கரோதயா |
| 23-உரும்பிராய் சந்தி. | உரும்பிராய் கிராமிய வங்கி. |
| 29- உரும்பிராய் வடக்கு. | 25- உரும்பிராய் கணேசா. |
| 31 - ஊரெழு மேற்கு. | 30- ஊரெழு பிள்ளையார் கோயிலடி |
| 32- ஊரெழு வடக்கு. | 30- ஊரெழு பிள்ளையார் கோயிலடி |

மேற்குறித்த வாக்காளர் பட்டியலில் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 05.03.2025 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தலைமைச் செயலகத்தின் செயலாளருக்கு அறியத்தரும் படி கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர். (3449) திகதி. 18.02.2025



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கிபா-5
உயரம் : 5'4"
தகைமை/தொழில்:
HNDA,Cashier(pvt)
எதிர்பார்ப்பு:நற்குணமுள்ள பெண்
தொ.இ: B/15122

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:சித்திரை
கிபா-42 1/2
உயரம் :5'6"
தகைமை/தொழில்:HNDin Construction Teachnology,Teachnical Assistant
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15124

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
தகைமை/தொழில்:O/L,France
எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்
தொ.இ: B/15129

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-2002-இந்து
நட்சத்திரம் :ரோகினி
கிபா:40
1இல் செவ்
உயரம் : 4'9"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு:
அரச உத்தியோகம் வெளிநாடு
தொ.இ: G/15130


பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்:அனுசம்
கிபா-35 1/4
உயரம் : 5'
தகைமை/தொழில்:MBBS ,Doctor
எதிர்பார்ப்பு:Doctor
தொ.இ: G/15134

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்:உத்திரட்டாதி
கிபா:0
1இல் செவ்
உயரம்:5'
தகைமை/தொழில்:
HNDin Managemant
எதிர்பார்ப்பு:அரசஉத்தியோகம், பட்டதாரி
தொ.இ: G/15137

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



## சேவைநலன் பாராட்டு




திருமதி.
**ஜெயகாந்தன் கார்மெலா**
(B.A, PGDE)
(பகுதித் தலைவர்– இடைநிலைப்பிரிவு)

சேவை விபரம்

- யா/மாதகல் சென்.தோமஸ் றோ.க.த.க பாடசாலை ஆசிரியர் - (17.08.1988 - 26.02.1991)
- யா/மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலை ஆசிரியர்- (27.02.1991 - 21.04.1996)
- கொ/ சென்.ஆன்ஸ் மகளிர் மகாவித்தியாலயம் ஆசிரியர்- (22.04.1996 - 05.03.2006)
- வ/ வவுனியா இந்துக் கல்லூரி ஆசிரியர்- (06.03.2006 - 06.04.2011)
- வ/இராசேந்திரன்குளம் அ.த.க.பாடசாலை ஆசிரியர் - (07.04.2011 - 08.05.2011)
- யா/மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயம் ஆசிரியர் - (09.05.2011 - 17.02.2025)

எமது கல்லூரியில் 14 வருடங்கள் ஆசிரியராக, பகுதித்தலைவராக சேவையாற்றி 2025.02.18 இன்று மணிவிழாக் காணும் திருமதி.கார்மெலா ஜெயகாந்தன் அவர்கள் சகல நலன்களுடன் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்– பாடசாலைச் சமூகம்,
யா/சென்.ஜோசப் மகாவித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கனடாவில் அடுக்குமாடி குடியிருப்பொன்றில் தீவிபத்து

### 12 பேர் வைத்தியசாலையில் அனுமதி



(ஒட்டாவா)

கனடாவின் டொரொண்டோவில் உள்ள அடுக்கு மாடிக் குடியிருப்பொன்றில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த அடுக்கு மாடிக் குடியிருப்பின் 6 ஆவது மாடியில் இத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாகவும் இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படைவீரர்கள் மற்றும் பொலிஸார் அடுக்குமாடிக் குடியிருப்பில் இருந்தவர்களை மீட்டுள்ளதுடன் தீப்பரவலையும் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத்தீவிபத்தில் 12 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர்களில் ஒருவரது நிலை கவலைக்கிடமாக உள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8)

## நரக வேதனையை அ
## ஹமாஸினை எச்சரித்

(ஜெருசலே
அனைத்து
விட்டால் நர
ஹமாஸ்⁶ச்
நெதன்யாகு

ஹமாஸ் பிடியில் இன்னும் பணயக்கைதிகள் உள்ளனர். அனைவரையும் உடனே விடுவிக்க வேண்டும் என இஸ்ரேல் வலியுறுத்தி வருகிறது. இந்த நிலையில் அமெரிக்க வெளியுறவு செயலாளர் மார்கோ ரூபியே அரசு முறைப் பயணமாக இஸ்ரேல் சென்றுள்ளார்.

ஜெருசலேமில் அவர் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தித்து பேசினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறும் போது, "ஹமாஸ் அதிகாரத்தில் இருக்கும் வரை சமாதானம் சாத்தியமற்றது. இதனால் ஹமாஸ் அமைப்பு அழிக்கப்பட வேண்டும்," என்று



தெரிவித்தார்.

இதுகுறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறும் போது, "காசா போர் தொடர்பாக இஸ்ரேலும், அமெரிக்காவும் ஒரு பொதுவான உக்தியைக் கொண்டுள்ளன. அதே வேளை ஹமாஸ் அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்காவிட்டால் நரக வேதனையை அனுபவிக்க நேரிடும் என தெரிவித்தார்.

கா
இரா
அதை
யும்
இருக்
த்து
யும்
த்து
"இ
ஸ்⁶ச
நிறு


## உக்ரைனில் அமைதியை நிலைநாட்ட எங்கள் படைகளை நிறுத்த தயார்!

### பிரிட்டன் பிரதமர் தெரிவிப்பு

(லண்டன்)

உக்ரைனில் அமைதியை நிலைநாட்ட, எங்கள் படைகளை அங்கு நிறுத்தி வைப்பதற்குத் தயாராக உள்ளோம் என்று பிரிட்டன் பிரதமர் கேர் ஸ்டாமர் தெரிவித்தார்.

உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் அமைதிப் பேச்சு வார்த்தை நடத்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்



திட்டமிட்டு உள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் பங்களிப்பின்றி அமைதிப் பேச்சு வார்த்தை மேற்கொள்ள அமெரிக்காவும் ரஷ்யாவும் தயாராகி வருகின்றன.

இந்த பேச்சு வார்த்தை சவுதி அரேபியாவில் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஐரோப்பிய நாடுகளை அழைக்காதது குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரோன், பிரிட்டன் பிரதமர் கேர் ஸ்டாமர் உள்ளிட்டோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பிரிட்டன் பிரதமர் கேர் ஸ்டாமர் கூறியதாவது, உக்ரைன் நாட்டின் பாதுகாப்பு என்பது ஐரோப்பாவின் பாதுகாப்பை போன்றது.

எனவே உக்ரைனில் அமைதியை நிலை நிறுத்த, தேவைப்படும் பட்சத்தில் எங்கள் நாட்டுப் படைகளை அங்கு களம் இறக்கத் தயாராக இருக்கிறோம்.

ஒட்டுமொத்த ஐரோப்பிய நாடுகளின் படைகளும் அங்கு களம் இறக்கப்படும் பட்சத்தில், மீண்டும் ஒரு முறை உக்ரைனை தாக்குவதற்கு புடின் தயங்குவார். இவ்வாறு அவர் கூறினார். (6-8)

## தங்கச் சு
## 48 பேர் உ

### மாலியில் துயரப்

(காங்காபா)

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில், 48 பெண்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் கெனீயா மாவட்டத்தில் சட்டவிரோதமாக தங்கச் சுரங்கம் ஒன்று இயங்கி வந்துள்ளது. இந்தச் சுரங்கம் திடீரென இடிந்து விழுந்ததில் நூற்றுக் கணக்கானோர் மண்ணில் புதைந்துள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கி, 48 பெண்கள் உயிரிழந்தனர்.

## ஜல்லிக் கட்டுப் போட்டியில் காளைகள் முட்டியதில் 59 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(சென்னை)

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே தவசிமடை பகுதியில் புனித அந்தோனியார் சர்ச் திருவிழாவை முன்னிட்டு நடந்த ஜல்லிக்கட்டு போட்டியில் காளைகள் முட்டியதில் 59 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த ஜல்லிக்கட்டுப் போட்டிக்கு திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து காளைகள் அழைத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த போட்டியில் 725 காளைகளும், 350 மாடு பிடி வீரர்களும் கலந்து கொண்டிருந்ததாகவும் போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்ற வீரர்களுக்கும் காளைகளின் உரிமையாளர்களுக்கும் பெறுமதியான பரிசு பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இப்போட்டியில் கலந்து கொண்ட வீரர்களில் 59 பேர் காளைகள் முட்டியதில் காயமடைந்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# அனுபவிக்க நேரிடும்

# ரித்த இஸ்ரேல் பிரதமர்

ஜெருசலேம்)

**னைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்கா டால் நரக வேதனையை அனுபவிக்க நேரிடும் என மாஸ்க்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் ன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அதே
த்து
யும்
நரக
விக்க
வித்

காசாவில் ஹமாஸ் இராணுவத்தினையும், அதன் அரசியல் ஆட்சியையும் ஒழிக்க அரசு உறுதியாக இருக்கிறது. நாங்கள் அனைத்து பணயக் கைதிகளையும் மீட்டு வீட்டுக்கு அழைத்து வருவோம்.

"இஸ்ரேலுக்கும், ஹமாஸ்க்கும் இடையே போர் நிறுத்தம் பலவீனமாக உள்ளது.

கைதிகள் மற்றும் பணயக் கைதிகள் பரிமாற்றத்தின் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை இன்னும் நடத்தப்படவில்லை," என்று அவர் கூறினார். அமெரிக்கா, கட்டார், எகிப்து உள்ளிட்ட நாடுகள் மத்தியஸ்தம் செய்ததால் இஸ்ரேல்-ஹமாஸ் இடையே 42 நாட்கள் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதையடுத்து ஹமாஸ் அமைப்பினர் பணயக் கைதிகளாக பிடித்து சென்றவர்களை விடுவித்து வருகின்றனர். இதற்கு ஈடாக இஸ்ரேல் சிறையில் உள்ள பாலஸ்தீனர்களை விடுதலை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# நாடு கடத்தப்பட்ட 170 பாகிஸ்தானியர்கள்




(இஸ்லாமாபாத்)

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAE), ஓமன் மற்றும் பல நாடுகளில் இருந்து கடந்த 48 மணிநேரத்தில் சுமார் 170 பாகிஸ்தானியர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

நாடு கடத்தலை அடுத்து பாகிஸ்தானின் கராச்சியை வந்தடைந்த அவர்களில் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பாகிஸ்தானின் ஜியே நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

குடியேற்ற ஆதாரங்களின்படி, சவுதி அதிகாரிகள் 94 பாகிஸ்தானியர்களை 48 மணி நேரத்திற்குள் நாடுகடத்தியுள்ளனர்.

கறுப்பு பட்டியலில் உள்ளவர்கள், யாசகம் பெறுபவர்கள், போதைப்பொருள் வியாபாரம், சட்டவிரோதமாக தங்கியிருப்பது, சட்ட விரோதமாக வேலை செய்தல், பணியிடத்தில் இருந்து தலைமறைவு, ஒப்பந்தங்களை மீறுதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக இவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, ஐக்கிய அரபு எமிரேட்ஸில், சட்ட விரோத நடவடிக்கைகள் மற்றும் பிற மீறல்களுக்காக தண்டனை அனுபவித்த 39 பாகிஸ்தானியர்கள் கடந்த இரண்டு நாட்களில் நாடு கடத்தப்பட்டதாகவும் பாகிஸ்தானின் ஜியோ நியூஸ் தெரிவித்துள்ளது. (6-8)

# கச் சுரங்க விபத்தில் சிக்கி பர் உயிரிழப்பு; 10 பேர் காயம்

## ல் துயரம்



ரிக்க நாடான
ங்கச் சுரங்
ட விபத்தில்,
பரிதாபமாக
ானர்.
ரிக்க நாடான
னியா மாவட்
விரோதமாக
கம் ஒன்று
ள்ளது. இந்தச்
ரன இடிந்து
ற்றுக் கணக்
ணில் புதை


தில் சிக்கி, 48
பிரிழந்தனர்.

மேலும் 10 பேர் படுகாயம் அடைந்தனர்.

இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

கடந்த ஜனவரி 29 ஆம் திகதி, கங்காபா மாவட்டம் கூலிகோரோ பகுதியில் உள்ள ஒரு சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)



ளனர் எனவும், அவர்கள் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த போட்டிக்காக 300 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)

# கொங்கோவின் முக்கிய நகரை கைப்பற்றிய கிளர்ச்சியாளர்கள்

(கோமா)

கொங்கோவில் எம்.-23 என அழைக்கப்படும் கிளர்ச்சியாளர்கள், புகாவு நகரை கைப்பற்றி தாக்குதல் நடத்தியதால், அங்கு வசித்த ஆயிரக்கணக்கான மக்கள் மற்றும் இராணுவ வீரர்கள் தப்பியுள்ளனர்.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில், அந்நாட்டு இராணுவத்துக்கும், எம்.-23 என அழைக்கப்படும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே பல ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

இவர்கள் கொங்கோ இராணுவத்தில் இருந்து வெளியேறியவர்கள். இந்த எம்.-23 கிளர்ச்சியாளர்களை, அண்டை நாடான ருவாண்டா அரசு ஆதரிக்கிறது. அதன் வாயிலாக அவர்கள், கனிம வளம் மிகுந்த கொங்கோவின் கிழக்குப் பகுதிகளைக் கைப்பற்றி வருகின்றனர்.

இவர்களால் கொங்



கோவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு போரில் இதுவரை 3,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 3.5 லட்சம் மக்கள் வீடு, தொழில், வேலைவாய்ப்பை இழந்து சொந்த நாட்டிலேயே அகதிகளாகி உள்ளதாக ஐ.நா கூறியுள்ளது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை எம்.-23 படையினர், கொங்கோவின் கிழக்கில் உள்ள இரண்டாவது பெரிய நகரமான புகாவுவை கைப்பற்றினர்.

அதன் புறநகர் பகுதியில் உள்ள விமான நிலையத்தையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். எம்.23 படையினரை தடுக்கும் முயற்சியில் இராணுவத்தினர் தோல்வி அடைந்தனர்.

இதனால் நகரில் இருந்த ஆயுதக் கிடங்கை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி விடக்கூடாது என்பதற்காக அதை வெடி வைத்து அழித்து விட்டு தப்பித்து சென்றுள்ளனர். இதன்போது, ஆயிரக்கணக்கான பொது மக்களும் போருக்குப் பயந்து நகரை விட்டு தப்பித்து ஓடியுள்ளனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடுகளுக்கு தீ வைப்பவர்களை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

நிலவும் வறண்ட வானிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் காட்டுத் தீ பரவல் அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பதுளை, குருநாகல், கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் காட்டுத்தீபரவல் அதிகரித்துள்ளதாக அதன் பணிப் பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

அதேநேரம், வனவளப் பாது காப்புத் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆகியன பொலிஸாருடன்இணைந்து, காடுகளுக்கு தீ வைப்பவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கை களை முன்னெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6-8)

# மீனவர்கள் விவகாரம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்

## மத்திய அரசை வலியுறுத்தும் கனிமொழி

(கொழும்பு)

இந்திய - இலங்கை மீனவர்களி டையேயான பேச்சுவார்த்தைக்கு மத்திய அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என இந்திய பாராளு மன்ற உறுப்பினர் கனிமொழி வலி யுறுத்தியுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர் களையும் படகுகளையும் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி காரைக் காலிலும் இராமேஸ்வரத்திலும் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், இராமேஸ்வரத் தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய - இலங்கை மீனவர் களிடையே பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என தமிழக அரசு, தொடர்ந்தும் மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்து வருகிறது.

எனினும் இதுவரை மீனவர்களி டையேயான பேச்சுவார்த்தை நடத் தப்படவில்லை. எவ்வாறாயினும் தமிழக முதல்வர் விரைவில் மீன வர்களின் பிரச்சினைகளுக்கு நிரந் தரத் தீர்வு காண்பார் எனவும் இந் திய பாராளுமன்ற உறுப்பினர் கனி மொழி தெரிவித்துள்ளார். (6-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 600 | 500 | 500-650 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 175 | 240 |
| பச்சைமிளகாய் | 1400 | 1350 | 1200 | 1200-1300 | 1400 |
| தக்காளி | 200 | 120 | 150 | 100 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 300-400 | 200 |
| கோவா | 350 | 350 | 350 | 300 | 400 |
| கரட் | 850 | 850 | 600 | 850 | 1000 |
| பூசணி | 120 | 140 | 120 | 80 | 200 |
| புடோல் | 200 | 250 | 200 | 200-250 | 400 |
| வாழைக்காய் | 200 | 140 | 150 | 100-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 300-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 195 | 250 |
| பாகற்காய் | 600 | 500 | 600 | 350-550 | 600 |
| வெண்டக்காய் | 350 | 400 | 300 | 300-400 | 500 |
| கருணைக் கிழங்கு | 200 | 250 | 180 | 150 | 300 |
| பயற்றங்காய் | 650 | 450 | 400 | 400-500 | 400 |
| லீக்ஸ் | 450 | 400 | 300 | 370 | 600 |
| பீற்றூட் | 350 | 250 | 250 | 170 | 400 |
| கறிமிளகாய் | 800 | 800 | 1000 | 700-800 | 1200 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 1000 | 2500 | 2000 |
| போஞ்சி | 350 | 350 | 300 | 350-400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 400 | 400 | 700 | 500 | 400 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 150 | 60-70 | 150 |
| தேசிக்காய் | 200 | 250 | 150 | 150-200 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 220 | 250 | 150-250 | 230-280 |
| இராசவள்ளி | 600 | 600 | 600 | 500-600 | 500 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 200 | 80-100 | 250 |
| முள்ளங்கி | 100 | 120 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | 120 | 80 | 150 | 120 |

# இன்று ஒரு தகவல் 324

பகுதி-02 தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## அர்த்தமே வேறுதான்

சிலபேர் எப்படி என்றால்...

அவர்கள் பேசும் வார்த்தை ஒரு மாதிரியாக இருக்கும்! அதற்கு அர்த்தம் வேறு மாதிரியாக இருக்கும்.

அதனால் நாம் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்துவிடக்கூடாது. யோசித்துப் பார்க்க வேண்டும். இல்லையென்றால் விபரம் தெரிந்தவர்களைக் கேட்டு அதற்கு அர்த்தம் என்ன என்று கண்டுபிடிக்க வேண்டும்.

ஒரு ஊரிலே ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள். கடைசிக்காலத்தில் அவர் அந்த மூன்று பிள்ளைகளையும் அருகில் அழைத்து மூன்று அறிவுரைகளைச் சொல்லிவிட்டு இறந்து விட்டார்.

அவர் சொன்ன அறிவுரைகள் என்ன தெரியுமா? பெற்ற தாய்க்கு சோறு போடாதே! இது ஒரு அறிவுரை. கொடுத்த கடனைக் கேட்காதே! இது ஒரு அறிவுரை. விதைத்த நிலத்திற்கு வேலி போடாதே! இது ஒரு அறிவுரை. என்ன இது எல்லாம் ஒரு மாதிரியாக இருக்கிறது. இதையெல்லாம் பார்த்தால் அறிவுரை மாதிரியாகவா தெரிகிறது.

என்னப்பா இப்படி சொல்கிறீர்களே என்று கேட்கலாம் என்றால் அவர் அதற்குள் கண்ணை மூடிவிட்டார். சரியென்று அப்பா சொல்லிவிட்டுப்போன அறிவுரைக்கு அர்த்தம் என்ன என்று கண்டுபிடிப்போம் என்று சொல்லி அந்த மூன்று பிள்ளைகளும் ஆளுக்கு ஒரு அறிவுரையை எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டார்கள். விபரம் தெரிந்தவர்களை கேட்கலாமென்று.

ஒரு பெரியவர் வந்தார். அவரைப் பார்த்து விளக்கம் கேட்டார்கள். ஐயா கொஞ்சம் நில்லுங்கள். எங்கள் அப்பா இறக்கும் சமயத்திலே பெற்ற தாய்க்கு சோறு போடாதே என்று சொல்லிவிட்டு போனார். அப்படி என்றால் என்ன அர்த்தம் என்று கேட்டார்.

அந்தப் பெரியவர் கொஞ்சம் யோசித்துப் பார்த்துவிட்டு விளக்கம் சொன்னார்.

பெற்ற தாய்க்கு சோறு போடாதே என்றால் பொதுவாக வயதானவர்களுக்கு அடிக்கடி கோபம் வரும்... மருமகளோ மற்றவர்களோ சோறு போட்டால் சீராக போட்டால் ஐயோ குறைத்து போடுகிறார்களே தாராளமாக போட மனது வரவில்லையே என்பார்கள்.

தாராளமாக போட்டால் ஐயோ இப்படி மாட்டிற்குக் கொட்டுவது போல கொட்டுகிறார்களே என்பார்கள். ஆக எப்படி போட்டாலும் கோபம் வரும். அதனாலே இவர்களுக்கெல்லாம் நாம் சோறு போடக்கூடாது. அவர்களாக எடுத்து போடுகிற மாதிரி அவர்களுக்கு முன் வைக்க வேண்டும். அதுதான் புத்திசாலித்தனம். அதைத்தான் உங்கள் அப்பா பெற்ற தாய்க்கு சோறு போடாதே என்று சொல்லியிருக்கிறார் என்று விளக்கம் கொடுத்தார் அந்தப் பெரியவர்.

சரி அடுத்தபடியாக எங்கள் அப்பா கொடுத்த கடனைக் கேட்காதே! அது எப்படி கேட்காமல் இருக்க முடியும் என்றார்.

பெரியவர் சொன்னார் கொடுத்த கடனைக் கேட்காதே. கடனைக் கொடுத்துவிட்டு அதை கேட்கும் அளவுக்கு நடந்துகொள்பவருக்கு கடன் கொடுக்காதே என்று அர்த்தம். கொடுத்த கடனைக் கேட்காமலே திரும்ப கொண்டுவந்து கொடுக்கிற நல்லவர்களாக பார்த்து கடனைக் கொடுக்க வேண்டும். அதைத்தான் உங்கள் அப்பா கொடுத்த கடனை கேட்காதே என்று சொல்லியிருக்கிறார் என்றார்.

உடனே இவர்கள் அந்த மூன்றாவது விடயத்தையும் சொல்லி விளக்கம் கேட்டார்கள்.

விதைத்த நிலத்திற்கு வேலி போடாதே என்று சொன்னாரே. அது எப்படி வேலி போடாமல் இருக்க முடியும் என்று கேட்டார். ஏன் முடியாது? நம் நிலத்தைச் சுற்றி இருக்கிற நிலத்திற்கு சொந்தக்காரர்கள் எல்லாம் நல்லவர்களாக இருந்தால் நம் நிலத்திற்கு வேலிபோட வேண்டிய அவசியம் இல்லையே! வேறு பாதுகாப்பு தேவை இல்லையே!

அதனாலே நல்லவர்கள் நிலத்திற்கு மத்தியிலே நம் நிலம் இருக்கிற மாதிரி பார்த்துக்கொள்ள வேண்டும். அதுதான் அதற்கு அர்த்தம் என்றார் அந்தப் பெரியவர்.

அதற்குப் பிறகுதான் இந்தப் பிள்ளைகளுக்கு அப்பா சொன்ன புத்திமதி யின் பொருள் புரிந்தது.

ஒரு பெரியவர் இந்த உலகத்தை விட்டு போகக்கூடிய நிலைமையிலே இருக்கிறார். கட்டிலிலே படுத்திருந்தார். சொந்தக்காரர்களையெல்லாம் கூப்பிட்டு ஆளுக்கு ஒரு புத்திமதி வீதம் சொல்லிக்கொண்டு இருந்தார். அவர்கள் எல்லாம் அருகில் வந்து புத்திமதியைக் கேட்டுக் கொண்டு போனார்கள். கடைசியாக அவருடைய மனைவி அருகில் வந்தார். எனக்கு என்ன புத்திமதி சொல்லிவிட்டுப் போகிறீர்கள் என்று கேட்டார்.

உனக்கு எதுவும் புத்திமதி சொல்ல வேண்டாம் என்று நினைக்கிறேன் என்றார் அவர். ஏன் என்று கேட்டார் மனைவி.

இதுவரைக்கும் நான் சொன்ன எந்தப் புத்திமதியை நீ ஒழுங்காக கேட்டிருக்கிறாய் என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் போராளியின் உணவு தவிர்ப்பு போராட்டம்
# தற்காலிகமாக இடைநிறுத்தம்

(நெளுக்குளம்)

முள்ளிவாய்க்கால் நினைவுமுற்ற வளாகத்தில் முன்னாள் போராளி ஒருவர் பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீதி கிடைக்கும் வரை சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு, அழகரெத்தினம் வனகுலராசா எனும் விசேட தேவையுடைய முன்னாள் போராளி ஒருவர் முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற வளாகத்தில் நீர் மற்றும் உணவு இல்லாமல், நீதிகிடைக்கும் வரை உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டிருந்தார்.

10 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, நான்காவது நாளான நேற்று பொதுமக்கள், வடகிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைவாக தனது உணவு தவிர்ப்பு போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளார். (6-8-299)



சுழிபுரம் மேற்கு கலைமகள் அறநெறிப் பாடசாலை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரால் திறந்து வைக்கப்பட்டது.

(படம்:-சுபேசன்)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயக்கல்வி அலுவலக முறைசாராக்கல்விப் பிரிவினால் தையல் பயிற்சிநெறி இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இதற்கு (தற்காலிகம்) தகுதியான போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி வடமராட்சி பிரதேசத்துக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை எதிர்வரும் 2025. 02.25 ஆம் திகதிக்கு முன்னர் "வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அதன் கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-8)

## நீங்காத நினைவுகளுடன்
## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர். கருணாகரன் ரதீஸ்வரன் (ரதி)**

**தோற்றம்** 01.11.1964

**மறைவு** 22.02.2022

**திதி: 18.02.2025**

பாரமாகி விட்டோம் என்றோ தூரமாகிப் போனாய் அப்பா!
வண்ணப் புகைப்படமாய் வாழ்ந்து
கொண்டிருக்கிறாய் - நம்
வரவேற்பறையில்; விதியின் சதி
நினைக்கும் பொழுது ஊற்றெடுக்கிறது விழிகளில் நதி
கடைசி வரை முடிவில்லா பயணம்
போலஆறாத ரணத்தோடு
பயணிக்க வைத்து விட்டாயே அப்பா....

*"என்றும் உன் இறுதி நிமிடங்கள் மறக்க முடியாது அப்பா."*

(858)

வைரவர் வீதி,
ஏழாலை தெற்கு, ஏழாலை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 39 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம்-2025
## பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம்

**பேராசிரியர் அழகையா துரைராசா** தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டுகள் 2020/2021 மற்றும் 2021/2022 இல் பட்டம் பெற்ற முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியெய்தி, எதிர்வரும் 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் அளிக்கப்படவிருக்கும் மாணவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடம், வியாபாரக் கற்கைகள் பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த மேற்படி கல்வியாண்டுகளில் தமது கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளும் இத் தங்கப்பதக்கத்திற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

➢ **விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் ஒரு முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.**

1. சிரேஸ்ட உதவிப்பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. பிரதிப் பதிவாளர், பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை, வவுனியாப் பல்கலைக்கழகம், வவுனியா.
3. பல்கலைக்கழக இணையத்தளம்: www.jfn.ac.lk

➢ **விருதுகள்:-**

- பல்கலைக்கழக மட்டத்தில் சகலதுறைகளிலும் சிறப்பாகசெயற்பட்டமைக்காக ஒரு பதக்கம்.
- பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக ஒவ்வொரு பீடத்திற்கும் ஒவ்வொரு பதக்கம்.

➢ **விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும், ஏனைய சான்றிதழ்களுடன் **"சிரேஸ்ட உதவிப் பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்"** என்னும் முகவரிக்கு **28.02.2025** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்திற்கான விண்ணப்பப்படிவம்"** எனக் குறிப்பிடவும்.

➢ **முடிவுத்திகதி: 28.02.2025 (வெள்ளிக்கிழமை)**

➢ **முக்கிய குறிப்பு:**

- ஏற்கனவே 2024 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 14 ஆம், 15ஆம், மற்றும் 16ஆம் திகதிகளில் நடைபெற்ற 38 ஆவது பட்டமளிப்பு விழாவின் போது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவை இல்லை.
- சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காதவையும் தெளிவற்றவையும் பூரணப்படுத்தப்படாதவையும் மற்றும் முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுபவையுமான விண்ணப்பங்கள் யாவும் கருத்திற் கொள்ளப்படமாட்டா.

(c-2287)

**பதிவாளர்**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 39 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம்-2025
## பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்

**பேராசிரியர் கந்தையா குணரத்தினம்** தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டுகள் 2020/2021 மற்றும் 2021/2022 இல் பட்டம் பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய, பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான பீடங்களையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடங்களையும் சேர்ந்த தூய, பிரயோக விஞ்ஞானப்பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

➢ **தகைமை:-**

எதிர்வரும் 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம், விவசாயம், பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட சிறப்புப்பட்டம் அளிக்கப்படவிருக்கும், முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்கள்.

➢ **விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் ஒரு முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.**

1. சிரேஸ்ட உதவிப்பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. பிரதிப் பதிவாளர், பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை, வவுனியாப் பல்கலைக்கழகம், வவுனியா.
3. பல்கலைக்கழக இணையத்தளம்: www.jfn.ac.lk

➢ **விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும், ஏனைய சான்றிதழ்களுடன் **"சிரேஸ்ட உதவிப் பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்"** என்னும் முகவரிக்கு **28.02.2025** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கத்திற்கான விண்ணப்பப்படிவம்"** எனக் குறிப்பிடவும்.

➢ **முடிவுத்திகதி: 28.02.2025 (வெள்ளிக்கிழமை)**

➢ **முக்கிய குறிப்பு:**

- ஏற்கனவே 2024 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 14 ஆம்,15ஆம், மற்றும் 16ஆம் திகதிகளில் நடைபெற்ற 38 ஆவது பட்டமளிப்பு விழாவின் போது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவை இல்லை.
- சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காதவையும், தெளிவற்றவையும், பூரணப்படுத்தப்படாதவையும் மற்றும் முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுபவையுமான விண்ணப்பங்கள் யாவும் கருத்திற் கொள்ளப்படமாட்டா.

(c-2288)

**பதிவாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 705





இளவரசர் கொண்டிருந்த பீதியும் சிறிது தெளிந்தது. பெருமாள் கோவிலிலிருந்து வந்த பிரசாதங்களை, இருவரும் அருந்தினார்கள்.

பின்னர் முதன் மந்திரி, "இளவரசே! இனி இரவு நிம்மதியாகத் தூங்குங்கள்! பொழுது விடிந்ததும் தங்கள் உசிதம் எப்படியோ அப்படிச் செய்யலாம். நான் தஞ்சைக்குத்தான் போகிறேன். என்னுடன் வருவதாயிருந்தால், தங்களைப் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன்!" என்றார்.

"ஐயா! தாங்கள் எனக்கு எவ்வளவோ தீங்கு செய்திருக்கிறீர்கள். அதற்கெல்லாம் பரிகாரம் இன்று செய்து விட்டீர்கள். இன்று எனக்குச் செய்த உதவியை என்றும் மறக்க மாட்டேன். அதற்கு எப்போதும் நன்றி செலுத்துவேன். ஒருவேளை இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் நான் அமரும்படி நேர்ந்தால் தங்களையே முதன் மந்திரியாக வைத்துக் கொள்வேன்!" என்றான் மதுராந்தகன்.

அநிருத்தர் அதிசயக்கடலில் முழுகிப் போனதாகப் பாவனை செய்து "இளவரசே! சோழகுலத்துக்கு நான் கடமைப்பட்டவன். இந்தக் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் ஆலோசனை சொல்வதும் இயன்ற உதவி செய்வதும் என் கடமை. ஆகையால் தாங்கள் தனிப்பட எனக்கு நன்றி செலுத்த அவசியமில்லை. ஆனால் தங்களுக்கு நான் ஏதோ தீங்கு செய்திருப்பதாகச் சொன்னீர்களே அதுதான் எனக்கு விளங்கவில்லை.

நான் தங்களுக்கு மனமறிந்து எந்தத் தீங்கும் செய்ததாக ஞாபகமில்லை. தாங்கள் சற்றுப் பெரிய மனது செய்து தெரியப்படுத்தினால் அதற்குப் பிராயச்சித்தம் என்ன உண்டோ அதைச் செய்து விடலாம்!" என்றார்.

"ஐயா அநிருத்தரே! தாங்கள் மகா கெட்டிக்காரர், அறிவாளி, இராஜதந்திர நிபுணர் என்பதெல்லாம் உலகமறிந்த விஷயம். ஆனால் தங்கள் கெட்டிக்காரத்தனத்தை என்னிடம் காட்டவேண்டாம். தாங்கள் எனக்குச் செய்திருக்கும் தீங்கு எவ்வளவு கொடுமையானது என்பது எனக்குத் தெரியாது என்றும் எண்ண வேண்டாம். ஆனாலும் இன்று தாங்கள் எனக்குச் செய்த உதவியை முன்னிட்டு அதையெல்லாம் மறந்து விடப்போகிறேன். என்னுடைய நன்றியைத் தங்களுக்கு எந்த விதத்தில் தெரியப்படுத்தலாம் என்று சொல்லுங்கள். ஏதாவது பிரதி உபகாரம் செய்யக் கூடியது இருந்தால் கூறுங்கள்."

அநிருத்தர் புன்னகை புரிந்து, "ஆம், இளவரசே! தாங்கள் நன்றியைச் செலுத்த வழி ஒன்று இருக்கிறது. தங்களிடம் இந்தக் கிழவன் கோர வேண்டிய வரம் ஒன்றும் இருக்கிறது. இனி இம் மாதிரி குதிரை ஏறித் தனி வழியே கிளம்ப வேண்டாம். முன்னும் பின்னும் பரிவாரங்கள் சூழ ரதத்தில் பிரயாணம் செய்யுங்கள். அதைவிடப் பல்லக்கில் பிரயாணம் செய்வது நலம், காலம் கெட்டிருக்கிறது. பல காரணங்களினால் மக்கள் மனக் கொதிப்பு அடைந்திருக்கிறார்கள். இன்றைக்குப் பழையாறையில் பார்த்தீர்களே! ஆகையால் திறந்த பல்லக்கில் பிரயாணம் செய்வதைக் காட்டிலும் மூடு பல்லக்கில் பிரயாணம் செய்வது நல்லது. பழுவூர் இளைய ராணியின் பல்லக்காக இருந்தால் ரொம்ப விசேடமாயிருக்கும். யாரும் சந்தேகிக்கவே மாட்டார்கள்!" என்றார். மதுராந்தகன் அசந்து போனான். அவன் முகத்தில் மறுபடியும் பயத்தின் அறிகுறி காணப்பட்டது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## வினை விதைத்தவன் வினை அறுப்பான்



ஒரு விவசாயிக்கு விசுவாசமான காளை மாடு ஒன்று இருந்தது. அது எல்லா விதத்திலும் அவருக்கு உதவியாய் இருந்தது. ஒரு நாள் அதன் பக்கத்தில் கொசு ஒன்று வந்தது.

அந்தக் கொசு காளையிடம் சொல்லியதாம், "நீ தினமும் அந்த விவசாயிக்கு நிறைய உதவி செய்கிறாய். நீ தினமும் அந்த விவசாயியை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு கூட்டிக் கொண்டு போகிறாய். அதுக்கு பதில் உனக்கு என்ன தான் கிடைக்குது வெறும் புல் மட்டும் தானே சாப்பிடக் கொடுக்கிறார்கள்" என்றது.

அதுக்கு அந்த காளை மாடு சொல்லியதாம், "இங்க பாரு நண்பா அதெல்லாம் ஒரு பிரச்சினையும் இல்லை. மனிதர்களுக்கு உதவி செய்வது எனக்கு ரொம்பவே பிடிக்கும். அவர்கள் என்னை மிகவும் நன்றாகப் பார்த்துக் கொள்கிறார்கள் என்றது. அதற்கு அந்தக் கொசு சொல்லியதாம், "இந்த மனிதர்கள் அவர்களுடைய தேவைக்காகத் தான் உன்னை பயன்படுத்துகிறார்கள். அதனால் தான் நான் இந்த மனிதர்களுக்கு உதவி செய்வது இல்லை.

அதற்குப் பதில் அவர்களுடைய இரத்தத்தை நான் உறிஞ்சி விடுவேன், ஆனால் நீ ரொம்ப பெரிய உருவமாக இருந்தும், இந்த மனிதர்களுக்கு நீ அடிமையாய் இருக்கிறாய். ஆனால் என்னையப் பாரு நான் ரொம்ப சின்னதா இருக்கேன் ஆனாலும் அவர்களுடைய இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டு இருக்கிறேன்".

அந்தக் காளை மாடு சொல்லியது "நான் மனிதர்களுக்கு ஏன் உதவி செய்வேன் தெரியுமா, அவர்கள் எனக்கு சாப்பாடு கொடுக்குறார்கள். தங்க இடம் கொடுத்து இருக்கிறார்கள். உடம்பு சரி இல்லை என்றால் மிகவும் நன்றாக கவனிக்கிறார்கள்.

நான் வேலை செய்தால் பாசத்தோடு தட்டிக் கொடுக்கிறார்கள். அதனால தான் நான் அவர்களுக்கு மிகவும் விசுவாசமா இருக்கிறேன்" என்றது.

அதற்கு கொசு சொல்லியது, "ஆனால் நீ செய்கின்ற வேலைக்கு இது மிகவும் குறைவாகத் தெரியலையா? நீ இரவும் பகலும் வேலை செய்தால் உனக்கு அன்பு மட்டும்தான் கொடுக்குறாங்க. ஆனால் நான் உன்னை விட ரொம்பவும் பரவாயில்லை, பார்க்க ரொம்ப குட்டியாக இருந்தாலும் ஒரு நாளும் அவர்களுக்கு நான் அடிமையாக இருந்ததில்லை" என்றது கொசு. அதற்கு காளை மாடு சொல்லியது "நீ மிகவும் முட்டாளாக இருக்கிறாய். இதுக்கெல்லாம் நீ பெருமைப் படவே கூடாது. மனிதர்களுக்கு ஏன் உன்னை பிடிக்கவில்லை என்றால் நீ அவர்களுடைய இரத்தத்தை உறிஞ்சுவதுடன் அவர்களுக்கு எந்த உதவியும் செய்ய மாட்டேன் என்கின்றாய். நீ ஒரு பூச்சியாக மட்டும்தான் அவங்களுக்கு தெரிகிறாய் என்றது.

"அதைப் பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை" என்றது கொசு. மாடு சொன்னதைக் கேட்காமல் அந்தக் கொசு அங்கிருந்து பறந்து போனது. எப்பவும் போல ஒரு நாள் அந்த விவசாயி மேல் போய் உட்கார்ந்த கொசு அவருடைய இரத்தத்தை உறிஞ்சத் தொடங்கியது. விவசாயி அந்தக் கொசுவை ஒரே அடி அடித்து விட்டார், அதுவும் செத்துப் போய் விட்டது. கெட்டது செய்தால் கெட்டதே விளையும்.

நீதி : எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்ய நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள் புதைந்து கிடக்கும் நல்லவைகளை உணரும்போதே பிறரோடும் நல்லவைகளை பகிர்ந்து கொள்ள முடியும். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நம்பிக்கை தரக்கூடிய வரவு செலவுத் திட்டம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் நேற்று (17) இலங்கைப் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதியும் நிதியமைச்சருமான அநுர குமார திஸாநாயக்கவால், 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று பாராளுமன்றத்தில் வாசிக்கப்பட்டது.

ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த அநுர குமார திஸாநாயக்க இந்த நாட்டின் ஜனாதிபதி என்ற அதியுயர் பதவியைப் பெற்றதன் மூலம் பாரம்பரிய இலங்கை அரசியலின் வரலாறு மாற்றியமைக்கப்பட்டது.

ஆம், சாதாரண குடும்பத்தில் பிறந்த அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதி என்ற உயர் பதவியோடு நிதியமைச்சர் என்ற வகையில், 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளார்.

வழமையில் வசதியும் அரசியல் பாரம்பரியமும் கொண்ட நிதியமைச்சர்கள் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கின்ற கலாசாரமே நம் நாட்டில் இருந்தது.

ஆனால் அதனை மாற்றியமைக்கும் வகையில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒருவர் நிதியமைச்சராகி, வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கின்ற ஒரு புதிய பரிணாமம் நேற்று நடந்தாகியது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் மக்களின் வாழ்வாதாரத்தை மையப்படுத்தியதாக அமைந்திருப்பதைக் காண முடியும்.

ஆம் சுகாதாரம், கல்வி, விவசாயம் ஆகியவை தொடர்பில் அதிகூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கான நிதி ஒதுக்கீடுகளும் கணிசமான இடத்தைப் பெற்றுள்ளன.

இதுதவிர, அரச மற்றும் தனியார் துறையினருக்கான சம்பள அதிகரிப்பு என்பதும் சம்பந்தப்பட்டவர்களை ஆற்றுப்படுத்தும் என்பதுடன் எதிர்வரும் காலங்களில் சம்பள அதிகரிப்புக் கோரி தொழிற்சங்கப் போராட்டம் இடம்பெறுவதற்கான சூழ்நிலையைத் தவிர்த்துள்ளது என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற வாகனப் பேர்மிட் இம்முறை (2025) வழங்கப்படவில்லை என்பதும் அரசாங்கத்திடம் உள்ள, அதிக செலவுடைய சொகுசு வாகனங்களை விற்பனை செய்வது என்ற தீர்மானமும் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

இதேவேளை அரசாங்கத்துக்குரித்தான தரிசுநிலங்களைக் குத்தகைக்கு விடுவதற்கான ஏற்பாடுகளும் குறித்த வரவு செலவுத் திட்டத்தினூடு முன்மொழியப்பட்டுள்ளமை இங்கு குறித்துரைக்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஆம், அரசாங்கத்துக்கு உரித்தான தரிசு நிலங்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் குறித்த நிலம் ஏதோவொரு பயிர்ச்செய்கைக்குப் பயன்படக்கூடிய வாய்ப்பு உண்டு.

அதிலும் குறித்த அரச காணிகளை நிலமற்றவர்களுக்குக் குத்தகையாக வழங்குவது சாலச் சிறப்புடையதாக இருக்கும்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரசின் வரவு செலவுத் திட்டம் வறுமை ஒழிப்பு, சமூக நலன், விவசாய உற்பத்தி என்பவற்றை உயர்வுபடுத்துவதை மையப்படுத்தி அமையப் பெற்றுள்ளது எனலாம்.

# மக்களை அச்சுறுத்தும் அநுர அரசின் எம்.பிக்கள்

## சபையில் நாமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பல்வேறு பகுதிகளில் பொது மக்களை அச்சுறுத்துவதாக இலங்கைப் பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மாத்தளையில் வசிக்கும் ஒருவரை தேசிய மக்கள் கட்சியின் உறுப்பினர் ஒருவர் அச்சுறுத்தும் காணொளி சமூக ஊடகங்களில் பரவலாகப் பரப்பப்படுவதாகத் தெரிவித்தார்.

மேலும், அக்குரஸ்ஸ மற்றும் அங்குணுகொலபெலஸ்ஸவிலும் இதே போன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், அரசாங்கப் பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்ளும் நபர்கள், அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிடும் மக்களை அச்சுறுத்துவதாக அவர் குற்றம் சுமத்தினார்.

மக்களை ஒடுக்குவதையும் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதையும் அரசாங்கம் தவிர்க்க வேண்டும் என்றும் அரசாங்கம் அதன் கிராமப்புறப் பிரதிநிதிகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ம-7)

## சுற்றுலாத்துறை வருமானம் 34.5 சதவீதமாக அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் ஜனவரி மாதத்தில் சுற்றுலாத்துறை வருமானம் 34.5 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கடந்த ஜனவரி மாதத்தில் 362.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் சுற்றுலாத்துறை வருமானமானது 269.3 மில்லியன் டொலர்களாக பதிவாகியிருந்தது. (ம-7)

## வவுனியா - மன்னார் வீதியில் மோ.சைக்கிள் விபத்து

### ஒருவர் சம்பவ இடத்திலேயே பலி

வவுனியா - மன்னார் வீதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானதாகப் பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த நிமல் (வயது - 35) என்ற நபரே மரணமடைந்தவராவார்.

மன்னார், பறயநாலங்குளம் பகுதியிலிருந்து இரண்டு இளைஞர்கள் வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர்.

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள பம்பைமடுவை அண்டிய பகுதியில் குறித்த மோட்டார் சைக்கிள் பயணித்துக் கொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியின் அருகிலிருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது டன், அதில் பயணித்த மற்றைய நபர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7.250)

## உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடுங்கள் - சிறீதரன்

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அநுர அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரல் மாதத்தில் தேர்தலை நடத்துவது என்பது தம்மைப் பொறுத்தவரை நெருக்கடியாக இருக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதற்கான காரணம் என்னவெனில், "சாதாரண தரப் பரீட்சை, வரவு செலவுத் திட்ட விவாதங்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு போன்ற சமய நிகழ்வுகள் குறித்த காலப்பகுதியில் வருவதால் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபடுவதில் சிரமத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் தேர்தல் திருத்தங்களில் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் குறித்து மகிழ்ச்சி அடைவதாகவும், பெண்களுக்கு 25 வீதம் வழங்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது என்றும் குறிப்பிட்டார்.(ம-7)

## பட்ஜெட்டில் வித்தியாசத்தை நாங்கள் காணவில்லை

### ஹர்ஷ டி சில்வா எம்.பி

(கொழும்பு)

முந்தைய அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டத்தின் தொடர்ச்சியாகவே வரவு செலவுத் திட்ட உரை இடம்பெற்றுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இந்தத் திட்டம் தவறு என்று தான் கூறவில்லை என்றாலும், அரசாங்கத்தின் சித்தாந்த நிலைப்பாடு குறித்து இது கடுமையான கவலைகளை எழுப்புகிறது என்று சில்வா கூறினார்.

"ஜேவிபி மற்றும் தேசிய மக்கள் கட்சி கருத்தியல் அடிப்படையிலான கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டியுள்ளது. இங்கு கலந்துரையாடப்பட்டது ஒரு புதிய தாராளமய வேலைத் திட்டம். அவர்கள் 40 ஆண்டுகளாக இதுபோன்ற கொள்கைகளை எதிர்த்தனர், ஆனால் இப்போது அவற்றை ஏற்றுக்கொண்டால், அவர்களின் கடந்த கால எதிர்ப்பின் நோக்கம் என்ன?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

"இந்த வரவு செலவுத் திட்டத்திற்கும் முந்தைய வரவு செலவுத் திட்டத்திற்கும் எந்த வித்தியாசத்தையும் நாங்கள் காணவில்லை" என்று சில்வா கூறினார்.

"அவர்கள் இப்போது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு ஒரு ஹோல்டிங் நிறுவனத்தை நிறுவுவதை ஆதரித்தால் அல்லது எரிபொருள் மற்றும் மின்சார விலை நிர்ணய சூத்திரங்களை ஏற்றுக்கொண்டால், ஏன் முன்பு அவற்றை எதிர்த்தார்கள் என்று நாம் கேட்க வேண்டும்?" என்று அவர் கூறினார். அவர்களின் எதிர்ப்பு மட்டும் இல்லையென்றால், நாடு முன்பே முன்னேறியிருக்க முடியும்.

"ஆனால் அவர்கள் இப்போது ஒரு சமூக சந்தைப் பொருளாதாரத்தை ஏற்றுக்கொண்டால், நாங்கள் அதை வரவேற்கிறோம். மேலும் அதை ஒரு வெற்றியாகக் காண்கிறோம்." என்றும் அவர் கூறினார்.(ம-7)

## ரணிலின் பட்ஜெட்டின் அட்டை மாற்றப்பட்டுள்ளது

### ஐ.தே.க தவிசாளர் வஜிர

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரவு செலவுத் திட்டத்தின் நீட்சியே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அரசாங்கம் செய்ததெல்லாம் ரணிலின் வரவு செலவுத் திட்ட புத்தகத்தின் பின் அட்டையில் உள்ள பெயரை மாற்றுவதுதான் என்றும் அபேவர்தன கூறினார்.

வரவு செலவுத் திட்டத்தில் உள்ள ஒரே புதிய திட்டம் கிளீன் ஸ்ரீலங்கா என்று கூறிய அபேவர்தன, அனைத்து திருத்தங்களும் பிற திட்டங்களும் ரணிலின் திட்டங்கள் என்றும் கூறினார்.


சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தங்களின் படி வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டினார்.

ரணில் நாட்டை ஆட்சி செய்த 2024 ஆம் ஆண்டில் நாட்டின் வருமானம் நல்ல நிலையை எட்டியதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏற்றுக் கொண்டதாகக் கூறிய அபேவர்தன, இன்றைய சமூகத்தில் உள்ள அழுத்தமான அரிசி மற்றும் தேங்காய் பிரச்சினைகளுக்கு வரவு செலவுத் திட்டத்தில் விரைவான தீர்வுகள் எதுவும் இல்லை என்று கூறினார்.

புதிய திட்டங்களை முன்வைக்கும் அளவுக்கு அதிக அறிவு இல்லை என்பதை வரவு செலவுத் திட்டம் எடுத்துக் காட்டுவதாகவும் வஜிர அபேவர்தன கூறினார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெல் அறுவடை செய்யும் இயந்திரம் குடைசாய்ந்து விபத்து



(அம்பாறை)

அம்பாறை கல்முனை பிரதான வீதி தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு அருகாமையில் உழவு இயந்திரத்தில் ஏற்றிச் செல்லப்பட்ட நெல் அறுவடை செய்யும் இயந்திரம் குடை சாய்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

இச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் உழவு இயந்திரம் மற்றும் நெல் அறுவடை செய்யும் இயந்திரம் பகுதியளவில் சேதமடைந்துள்ள போதிலும் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (6-8)

# சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 384 சிகரெட்டுகள் மீட்பு

(கொழும்பு)

சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரட்டுகளுடன் சந்தேக நபரொருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் தெஹியத்த கண்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அம்பாறை, தெஹியத்த கண்டிய பகுதியில் வசிக்கும் 55 வயதுடையவர் ஆவார். சந்தேக நபரிடமிருந்து 389 வெளிநாட்டு சிகரட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக தெஹியத்தகண்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (6-8)

# விமர்சிக்கும் தரப்பினரை அரசாங்கம் அச்சுறுத்துகிறது

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் எவ்வாறான பொய்களை எல்லாம் கூற முடியுமோ அத்தனையையும் கூறி மக்களை ஏமாற்றியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

களனி பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அரசியலமைப்பு பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தையும் தாம் விரும்பும் அரசியல் கருத்தைக் கொண்டிருப்பதற்கான சுதந்திரத்தையும் வழங்குகிறது எனவும் ஆனால் அரசாங்கத்தை விமர்சிக்கும் தரப்பினர் அச்சுறுத்தப்படுகின்றனர்.

குறிப்பாக அண்மையில் மாத்தளை மாவட்டத்தின் யடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த பிரஜை ஒருவர் தனது கருத்துக்களை முகநூல் ஊடாக வெளிப்படுத்திய போது அரசாங்கத்தையும் மக்கள் விடுதலை முன்னணியையும் சேர்ந்த ஒருவர், அவரின் வீடு சென்று அரசாங்கத்தை விமர்சிப்பதை நிறுத்துமாறு அழுத்தம் கொடுத்திருந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

பேச்சு சுதந்திரமும் கருத்து சுதந்திரமும் என்பது தனிமனித உரிமைகளாகும் எனவும் அதில் யாரும் அழுத்தம் பிரயோகிக்க முடியாது எனவும் வலியுறுத்தியுள்ளார். (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3294

காவேரி




ஜெர்ரிஷ்




டிலைக்ஷா




மீரா




மதன்




வேணி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்.பிக்களுக்கு...

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட பொது வளங்களை திறம்படப் பயன்படுத்த ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## சர்வதேச நாணய...

தெரிவிக்கையில்,

இந்த வரவு செலவுத் திட்டத்தில் வறுமையை ஒழிக்கும் வேலைத்திட்டமோ, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையாளர்களின் கடன் பொறிக்கோ தீர்வுகள் இல்லை. விவசாயம், கடற்றொழில் துறை, தோட்டக் கைத்தொழில் துறையினர் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

புதிய கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைக்குச் செல்வதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தேர்தல் மேடையில் கூறியிருந்தபோதும், அவர் நேரடியாகவே சர்வதேச நாணய நிதியத்தின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வருகின்றார். ஆட்சிக்கு வந்ததும் IMF உடன்படிக்கையில் திருத்தங்களை மேற்கொள்வதாகக் கூறினாலும் அதற்கு மாற்றமாகவே ஜனாதிபதி இந்த வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளார்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய ஜனாதிபதி மக்கள் ஆணையைப் புறக்கணித்து சர்வதேச நாணய நிதியத்தின் பணயக்கைதியாக மாறியுள்ளார். இந்த வரவு செலவுத் திட்ட உரையையும் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்றார். (ம-7)

## துண்டுவிழும்...

அமைய அரசாங்கத்தின் மொத்தச் செலவீனம் 7,190 பில்லியன் ரூபாயாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிணங்க 2025ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் துண்டுவிழும் தொகை 2,200 பில்லியன் ரூபாயாகக் காணப்படுகின்றது. (ம-7)

## உள்ளூராட்சித்...

மதி வழங்கப்பட்டுள்ளது.

சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டவுடன் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன சட்டமூலத்திற்கு ஒப்புதல் அளித்தார்.(ம-7)

## பொருளாதார...

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சமூக பொருளாதார அடித்தளத்தை அமைக்கும் இந்த வரவு செலவுத் திட்டம் வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதிலும், வலுவான சர்வதேச உறவுகளை உருவாக்குவதிலும், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வளர்ப்பதிலும் நாம் வெற்றி பெற்றுள்ளோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாம் நமது சொந்தப் பொருளாதார நிகழ்ச்சி நிரலை அமைத்து பொருளாதார இறையாண்மைக்கு நெருக்கமாகச் செல்ல வேண்டும். அத்துடன் எதிர்காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவதைத். தொடர வலுவான பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும்.

எதிர்காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவதைத் தொடர வலுவான பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும் என்றும் மக்களின் சம்பளம் குறைந்துள்ளதால் நியாயமான சம்பள உயர்வு வழங்க வேண்டும். குடிமக்களைப் பராமரிப்பது மனிதாபிமான அரசாங்கத்தின் பொறுப்பு.

பொருளாதார வளர்ச்சியை 2025 ஆம் ஆண்டு 5 சதவீதத்தில் பேணுவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களின் வாழ்க்கையையும் உயர்த்துவதற்கான வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## கிணற்றுக்குள்...

நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் விஸ்வமடு ரெட்பானா, முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த தனுசன் டனுசன் என்ற 3 வயது ஆண் குழந்தையும், கல்லூரி வீதி, வட்டு தெற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெருமாள் மகிந்தன் (வயது-30) என்ற தாய் மாமனுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

குறித்த குழந்தையும் தாய் மாமனும் கிணற்றினுள் விழுந்துள்ள நிலையில், குழந்தை மேலே மிதந்ததை அவதானித்தவர்கள் குழந்தையை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர், இருப்பினும் குழந்தை உயிரிழந்துள்ளது.

பின்னர் குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் குழந்தையின் மாமனை மீட்டு முதலுதவி அளித்தபோதும் அவரும் உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக இரண்டு சடலங்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## யாழ்ப்...

கருத்துத் தெரிவித்த அவர்,

யாழ்ப்பாணத்து மக்கள் பொது நூலகத்தைப் புனிதமாகக் கருதுகின்றனர். பாதணிகளைக் கழற்றிவிட்டே நூலகத்துக்குள் செல்கின்றனர் என்றார்.

மேலும் யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டமைக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதற்குரிய தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்காகக் குழு ஒன்று அமைக்கப்படும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

"வரலாற்றில் ஒரு காலத்தில் வாக்குகளுக்காக நூலகங்கள் எரிக்கப்பட்டன. யாழ்ப்பாண நூலகத்திற்கும் அது தான் நடந்தது.

யாழ்ப்பாணம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களும் வாசகர்களும் யாழ்ப்பாண நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர். யாழ்.நூல் நிலையம் எரிக்கப்பட்ட சம்பவமானது தமிழ் மக்களின் மனதில் ஆறாத வடுவாக உள்ளது என்றார். (ம-7)

## சுகாதாரம், கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு

இந்த ஆண்டு கல்வி மற்றும் சுகாதாரத்துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட உரையிலேயே ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

நாட்டின் அடுத்தகட்ட அபிவிருத்தி இலக்கினை நிறைவேற்றும் வகையிலான முன்மொழிவுகள் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.02.17
சீட்டிழுப்பு இலக்கம் 5750
H 1 4 3 4 8 5
அத சம்பத H 3 4 8 5
சீட்டிழுப்பு இலக்கம் 0325
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1780
S 02 08 22 38 S
04051

மெகா பவர்
திகதி 17/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2098
O 08 03 32 33 80

ஜய JAYA
திகதி 2025.02.17
சீட்டிழுப்பு இலக்கம் 018
F 1 0 7 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3992
சீட்டிழுப்பு திகதி 17.02.2025
E 02 06 22 41
E
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.17
சீட்டிழுப்பு இலக்கம் 1059
கடகம் 04 12 44 46 சுடகம்
88135 17

உத்தியோகபூர்வ முடிவுகள்
17.02.2025 வெற்றி வாரம் 458
ஆங்கில எழுத்து X
1 4 5 4 7 0
ரூ.31,316,119.20
93684
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2724
சீட்டிழுப்பு திகதி 2025.02.17 தினம் திங்கட்கிழமை
49 57 69 75 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,774,716.00
DLB

சனிதா
திகதி 17.02.2025 வெற்றி வாரம் 4885
01 11 22 68 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,762,940.40
56394
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.02.17 வெற்றி வாரம் 2104
01 07 43 46 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,893,800.40
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4436
சீட்டிழுப்பு திகதி 17.02.2025 தினம் திங்கட்கிழமை
28 33 55 59 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.12,444,463.20
245753
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 12 27 41 63 74
1900
17.02.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.565,628,283.40
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2550
சீட்டிழுப்பு திகதி : 2025.02.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,401,957.60
09 26 65 73 N
153237
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றாலையை கைவிட்டமை

# இந்தியா இலங்கையை கைவிட்டமைக்கான அறிகுறி

## முன்னாள் ஜனாதிபதி ரணில்

அதானி குழுமம் இலங்கையின் காற்றாலை மின் திட்டங்களை கைவிட்டமை, இந்தியா இலங்கையை கைவிட்டதற்கான அறிகுறி என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள அவருடைய காரியாலத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன் காரணமாக, எதிர்காலத்தில் இலங்கை சிரமங்களை சந்திக்கும் வாய்ப்புகள் உள்ளதாக அவர் வலியுறுத்தினார்.

மேலும், இந்திய அதானி நிறுவனம் காற்றாலை மின் திட்டங்களை கைவிட்டு, இந்நாட்டிலிருந்து வெளியேறியுள்ள நிலையில், தற்போதைய அநுர அரசாங்கம் அவர்களுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

# வேர் வரை ஊழல் ஒழிக்கப்படும்

## பட்ஜெட் உரையில் அநுர

(கொழும்பு)

இலங்கையில் வேர் வரை ஊழல் ஒழிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றைய தினம் திங்கட்கிழமை வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரி ஏய்ப்பு மற்றும் சட்டவிரோத நிதி நடவடிக்கைகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கை நாணயம் சில்லறைகள் மற்றும் தாள்கள் இல்லாத சகாப்தத்தை நோக்கி நகர்கிறது. ஊழலைத் தவிர்க்க இது ஒரு நல்ல முடிவு. தேவையில்லாமல் சொத்துக்களை குவிப்பவர்கள் இந்த முடிவுகளால் பாதிக்கப்படுவார்கள்.

இலஞ்சம் வாங்குபவர்கள் அனைவரும் பயப்படும் சமூகத்தை உருவாக்குவோம்.

தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபர் பொலிஸாருக்கே அதிகளவு தண்டனைகளை வழங்கியுள்ளார். வேர் வரை ஊழல் ஒழிக்கப்படும்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களையும் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். இந்த நாட்டில் இன முரண்பாடுகள் இனி இல்லை. மதம், இனம், பாலினம் என பிரிவடையும் காரணிகள் இல்லை

நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம். ஒருவருக்கொருவர் மரியாதையுடன் இருப்போம். இந்த அழகிய புண்ணிய பூமியை நமது தாய்நாடு என்று அழைப்பதில் பெருமிதம் கொள்கிறோம் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-7)


### உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2288)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
### ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (3438)
076 825 7716 (ஆகாஸ்)

### வேலையாட்கள் தேவை
கொழும்பு மற்றும் யாழ். நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
◆ முகாமையாளர் ◆ பேருந்து நடத்துனர்
◆ காசாளர் ◆ சாரதி (கொழும்பில் தங்கி நின்று
◆ அலுவலக உதவியாளர் வேலை செய்பவர் விரும்பத்தக்கது).
யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு : 076 440 8948
(3452)

### காணி விற்பனைக்கு
புங்குடுதீவு ஆலடி சந்தியிலிருந்து 150m தூரத்தில் அமைந்துள்ள 10 பரப்பு சதுரக் காணி விற்பனைக்கு உண்டு.
37 இலட்சம் ரூபாய்
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு : 076 284 1877
(3444)

### வேலையாள் தேவை
இயங்கிவரும் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு காசாளர் மற்றும் Bill clerk ஆகிய இரு வேலைகளையும் சேர்த்து செய்யக்கூடிய 50 வயதிற்கு மேற்பட்ட ஆண் ஒருவர் தேவை. (சங்கானை, சண்டிலிப்பாய், அளவெட்டி மற்றும் மல்லாகத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)
077 609 6581
(857)


# 56 வது பிறந்த தினமும் 7 ஆம் ஆண்டு நினைவலையும்...



தோற்றம் 18.02.1969

மறைவு 07.03.2018

அமரர்

## திருமதி தயாளன் ரூபாவதி (சாந்தி)

(திதி : 18.02.2025)

அம்மா என்றழைத்தவுடன் அள்ளி அணைத்தவர் நீங்கள்
கண் துஞ்சாக் கவலையுடன் கருத்தாக வளர்த்தவர் நீங்கள்
பாசத்தைப் பாலாக்கி பரிவோடு தந்தவர் நீங்கள்
மோசத்தில் எமை வீழ்த்தி முன் சென்றீர்களே ஏனம்மா?
அம்மா நீங்கள் எமைப்பிரிந்து ஏழாண்டு சென்றதுவோ?
அம்மா நீங்கள் எமை கருவில் சுமந்தீர்
நாம் உமை எம் நெஞ்சத்தில் சுமக்கின்றோம்.
அம்மா உங்கள் அகவையின்று ஐம்பத்தாறு
உங்கள் ஆசீர்வாதம் என்றென்றும் எங்களுக்கு வேண்டுமம்மா!
ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும் எமக்கு தாயாய்
பிறந்திடவே நாம் ஏங்குகிறோம் தாயே!

"ரூபமஹால்"
வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

கரையும் கண்ணீரில் நிறையும் நினைவுகளுடன்
கணவர் இ.தயாளன் மற்றும் பிள்ளைகள்
ராஜன் வீடியோ ஸ்ரூடியோ,
பருத்தித்துறை.

(C-2283)


### வேலையாட்கள் தேவை
யாழ். நகரில் அமைந்துள்ள கருவாட்டுக் கடைக்கு சிங்களத்தில் கதைத்து வியாபாரம் செய்யக்கூடிய வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு :
077 222 8312
(3448)

### விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
குறைந்த சதவீதத்தில்%
• Visit visa
• Student visa
• Fixed & saving
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :
075 033 6759
(838)

WESTERN UNION MONEY TRANSFER | DHL | Ria | Dialog | aramex | MMBL Money Master | MoneyGram | Enriching Your Life

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை, Western Union மூலம் அனுப்பிய பணத்தைபெற நீண்ட கால அனுபவமும், அதிவிரைவு சேவையுடன் கூடிய நம்பகமாக சேவைகள் இவை அனைத்தையும் பாதுகாப்பு, நம்பகத்தன்மை ஒரே கூரையின் கீழ் நாடுங்கள்.
SRI MURUGAN
ஸ்ரீமுருகன்
No.303, K.K.S Road,
Jaffna, Srilanka.
Tel : 0094 21 222 2690 / 5392
(C-2284)


# கல்விப் பணியில் அறுபதுகளில் சீலன்



## உயர்திரு. முருகேசு சத்தியசீலன்

Spl.Trained (Agri) B. Ed, S.L.P.S-1
[கோட்டக்கல்விப் பணிப்பாளர் - ஊர்காவற்றுறை, தீவகம்.]

முன்னைநாள் சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தின் அதிபரும் ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளரும் மணிவிழா நாயகனுமாகிய உயர்திரு. M.சத்தியசீலன் அவர்கள் இன்றுடன் தன் கல்விச்சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவர் உடல் உள ஆரோக்கியத்தோடு நீடித்த ஆயுள் பெற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறோம்.

Best Wishes!

அன்புடன் த. தனேந்திரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர் தர்காநகர் தேசிய கல்வியியல் கல்லூரி)

(856)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org